1978 ஆகஸ்ட் 31]

ஆக்ரா பல்கலைக் கழகம் முதலிய பல பல்கலைக் கழகங்களுக்கு தமிழ் பயிற்றுவிப்பதற்கான மானிய உதவிகள் தருவதன் மூலமும், கிடைத்தற்கரிய சுவடிகளைத் திரட்டுவதன் மூலமும், தமிழ்க் கவிஞர் ஒருவரை அரசவைக் கவிஞராக நியமிப்பதன் வாயிலாகவும் இந்த அரசு தமிழ் மொழி வளர்க்கும் பணிகளிலும் ஆர்வமுடன் ஈடுபட்டு வருகின்றது. மேலும், பிற நாட்டு நல்லறிஞர் எழுதிய நூல்களைத் தமிழில் மொழி பெயர்க்கவும், அவ்வாறே தமிழ் இலக்கியங்களை மற்ற மொழிகளில் மொழி பெயர்க்கவும் அரசு சிறப்பு முயற்சிகள் மேற்கொண்டுள்ளது. சட்ட மொழி பெயர்ப்புக் குழுவின் காலத்தை நீட்டித்து, சட்டங்களை மொழி பெயர்க்கும் பணியும் சிறப்பாக நடைபெற நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. நமது அரசியல் சட்டத்தை உருவாக்கிய அறிஞர்கள், ஆழ்ந்து சிந்தித்து, பல நாள் விவாதித்து ஒருமனதாக, மாநில அரசுகளின் பொறுப்பின்கீழ் கல்வி இருக்கும் வண்ணம், அரசியல் சட்டத்தை இயற்றினர்கள். அந்நிலை இடையிலே மாற்றப்பட்டது. மீண்டும் 'கல்வி' மாநிலங்களின் பொறுப்பில் வரவேண்டுமென்ற இந்த அரசின் உறுதியான கருத்தைச் செயல்படுத்துவதற்கான முயற்சிகளை, மத்திய அரசு மேற்கொண்டுள்ளதைப் பாராட்ட விரும்புகிறேன்.

20. மொழி, மக்களின் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்துள்ள அடிப்படை உணர்வாகும். எனவே மொழிக் கொள்கை மிகவும் கவனத்துடன் அணுக வேண்டிய ஒன்றாகும். தமிழகத்தின் மீது மொழித் திணிப்பு எந்த வகையில், உருவில், வழியில் வந்தாலும் சரி, அதனை இந்த அரசு ஏற்றுக்கொள்ளாது என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அது விபரீத விளைவுகளை ஏற்படுத்துமென்பதைச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழக முதல்வர், சென்ற மாநில முதலமைச்சர்களின் மாநாட்டைக் கூட்டி, தொடர் புடைய, முக்கியமான பிரச்சினைகளைப் பற்றி விவாதித்திருப்பது வரவேற்பிற்கும் பாராட்டிற்கும் உரிய ஒன்றாகும். இந்த மாநாட்டில் முதலமைச்சர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து, சில மத்திய அமைச்சரகங்கள் பிரதமரது உறுதி மொழிக்கு மாறுக, இந்தியைத் திணிப்பதை எடுத்துக் காட்டி, பிரதமர் இதனைத் தடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டனர். அதன் பின்னர், நமது பிரதமர், நாடாளுமன்றத்தில் யார் மீதும் மொழித் திணிப்பு இருக்காதென்றும், மொழி பற்றிய கொள்கையினைச் செயல்படுத்தும் போது, வழங்கப்பட்ட வாக்குறுதிகளுக்கு ஊறு ஏதும் நேரிடாத வகையில் செயல் படுவோம் என்றும் அண்மையில் கூறியுள்ளதை இந்த அவைக்கு குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். எனினும், பிரதமரின் வாக்குறுதிகளை மறுதலிக்கும் வகையில், மைய அரசின் சில அமைச்சரகங்கள் தொடர்ந்து இந்தியைத் திணிக்கும் முயற்சிகள் மேற்கொள்வது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. சென்ற ஆண்டில் நான் குறிப்பிட்டது போல, தமிழக அரசு இரு மொழிக் கொள்கையை செயல்படுத்துவதில் தொடர்ந்து உறுதியான

[1978 ஆகஸ்ட் 31

நம்பிக்கை கொண்டுள்ளது. அண்மையில், நாட்டின் கல்விக் கொள்கைப் பற்றி பல்வேறு மாநிலங்களின் கருத்தை ஆராயும் நேரத்தில், இருமொழிக் கொள்கையின்பால் நமக்குள்ள உறுதிப்பாட்டை அரசு மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

21. நமது அனைவரின் மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய, விடுதலைப் போராட்டத்தில் முழுமையாகத் தன்னை ஈடுபடுத்தி, தியாகத்தின், நாட்டுப்பற்றின் இலக்கணமாகத் திகழ்ந்த, மறைந்த தலைவர் காமராசர் அவர்களின் நினைவாக, மதுரையில் உள்ள பல்கலைக் கழகத்திற்கு அவரது பெயரிடப்பட்டு இருப்பதை மன்ற உறுப்பினர்கள் அனைவரும் வரவேற்பார்கள் என்பதில் எனக்குச் சிறிதும் ஐயமில்லை. சாதி, சமய வேறுபாடற்ற சமுதாயத்தை உருவாக்கிட, சமதர்மக் கோட்பாடுகள் மக்கள் இடையே மலர்ந்து மணம் பரப்பிட கடுமையாகப் பணியாற்றி, தமிழ்நாட்டு மக்களின் அன்புக்கும், நம்பிக்கைக்கும் உரியவராக வாழ்ந்த பேரறிஞர் அண்ணாவின் பெயர் தாங்கி உருவாக இருக்கும் ''பேரறிஞர் அண்ணா தொழில் நுட்ப பல்கலைக் கழகம்'' நமது நாட்டின் குடியரசுத் தலைவரால் அடுத்த வாரம் திறக்கப்பட இருக்கிறது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். பல்வேறு தொழில் நுட்பக் கல்லூரிகளையும், நிறுவனங்களையும் இணைத்து உருவாக்கப்பட்டிருக்கும் இந்த பல்கலைக் கழகம், தொழில் நுட்பக் கல்வியின் தரத்தை உயர்த்துவதோடு, நமது மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்கும், அறிவு வளர்ச்சிக்கும், அதன் விளைவாக பொருளாதார வளர்ச்சிக்கும் பெருந் துணையாக இயங்கும் என்பதில் ஐயமில்லை. கோவையிலும், திருச்சியிலும் பல்கலைக் கழகங்கள் ஏற்படுத்துவதற்கு அரசு வலியுறுத்தி வருகின்றது. இதற்கான ஒப்புதலை பல்கலைக் கழக ஆணைக்குழு விரைவில் வழங்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

22. சமுதாயத்தின் அடித்தளத்திலே இருக்கின்ற மக்களின் நலன்களையும், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்டவர்களின் உரிமைகளையும் பாதுகாத்து வளர்ப்பதில் நாட்டம் கொண்டுள்ள இந்த அரசு, மூட நம்பிக்கைகளைச் சுட்டெரித்து, அறியாமைச் சேற்றில் நெளி புழுக்களாக வாழ்ந்திட்ட மக்களின் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தி, சமுதாய சீர்திருத்தத்தின் ''விடிவெள்ளி'' எனும் சிறப்பினைப்பெற்று, தனது இறுதி மூச்சிருந்தவரை தொடர்ந்து பணி மேற்கொண்ட பெரியார் ஈ. வே. ரா. அவர்களின் நினைவாக, மத்திய அரசு சிறப்பு அஞ்சல் தலை வெளியிட வேண்டுமென்று கேட்டுக் கொண்டது. இதற்கு மத்திய அரசு தனது ஒப்புதலைத் தந்து இருப்பதை மகிழ்ச்சியுடன் பாராட்டுகிறேன். அவரது சிறந்த பணியின் காரணமாக, நாட்டின் இந்தப் பகுதியில் சாதி சமயச் சழக்குகளின்றி, அறிவார்ந்த முறையிலே அனைவரும் ஒன்றுபட்டு வாழ்வதற்கான அமைதி சூழ்நிலை உருவாயிற்று என்றால் அது மிகையாகாது. ஆனால், சில சமூக விரோதிகள் அங்காங்கே சாதி வேறுபாடுகளைத் தூண்டிவிட்டு, ஒன்றுபட்டு